# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## பத்திரிகை அறிவித்தல்

**பழைய பெறுபேற்றுப் பதிவேடுகள் பயன்பாட்டிலிருந்து நீக்குதல்**

சகல அமைச்சுச் செயலாளர்கள், பாராளுமன்றச் செயலாளர், திணைக்களத் தலைவர்கள், முதலமைச்சுச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், பொலிஸ் மா அதிபர், முப்படைத் தலைவர்கள், நீதிமன்ற நீதியரசர்கள், பிரதேசச் செயலாளர்கள்,மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், சகல கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டபூர்வ சபைகளின் தலைவர்கள், பணிப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பழைய பெறுபேற்றுப் பதிவேடுகள் பயன்பாட்டிலிருந்து நீக்கப்படுவதற்கான செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்நிமித்தம் 1965 ஆம் ஆண்டும் அதற்கு முன்னைய வருடங்களுக்குமுரிய க.பொ. த. சாதாரண தரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளுக்கும் அதற்குச் சமமான பரீட்சைகளுக்கும் தோற்றிய போதிலும் இதுவரை பரீட்சைப் பெறுபேறுகளை உறுதி செய்து கொள்ளாத மேற்படி நிறுவனங்களில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் , ஊழியர்களின் பரீட்சைப் பெறுபேறுகளைத் துரிதமாக உறுதி செய்யும் செயற்பாடொன்று என்னால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பெறுபேறுகளை உறுதிசெய்யும் விண்ணப்பப் பத்திரங்களை உரிய படிவங்களில் நிரப்பி பரீட்சைப் பெறுபேற்றின் பிரதியொன்றையும் இணைத்து 2006. 01. 31 ஆம் திகதிக்கு முன் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு கோருகின்றேன்.

இது தொடர்பான விபரங்கள் கொண்ட கடிதமொன்று உரிய நிறுவனங்களுக்கும் அலுவலகங்களுக்கும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது . எதிர்காலத்தில் 1965 ஆம் ஆண்டின் பிற்பட்ட வருடங்களுக்கும் படிப்படியாக இச்செயற்பாடு மேற்கொள்ளப்படும்.

இத்துடன் மேற்குறிப்பிடப்பட்ட வருடங்களில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களும் பரீட்சைப் பெறுபேற்றுப் பிரதியொன்றைப் பெறவிரும்பினால் அதற்கான தேவையினைத் தெரிவித்து உரிய விண்ணப்பப்படிவமொன்றைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி பெறுபேற்றுப் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ளமுடியும். இது தொடர்பான மேலதிக விபரங்களை பரீட்சைத் திணைக்களத்தின் சான்றிதழ் கிளையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

- விண்ணப்பப்படிவம் www. doenets . lk எனும் இணையத்தளத்திலும் உட்படுத்தப்பட்டுள்ளது.

அனுர எதிரிசிங்ஹ,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

சான்றிதழ்க் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சித்தலுக்குமான
சேவை,
பெலவத்த, பத்தரமுல்லை.

தொலைபேசி -2784323
2786200 நீட்டு- 256, 234, 255, 254